1093

16 MAR 1921
MADRAS

உ
சர்க்குருவேய நம

# அத்வைத ஞானசங்கீர்த்தனைகள்

இஃது
வசவேஸ்வரர் பரம்பரையான
கன்னட ராஜய்யசுவாமிகள் மாணுக்கர்களில்
ஒருவராகிய
**கன்னட கெம்புமுனி சுவாமிகள்**
இயற்றியவை

SCANNED

திருவள்ளூர்
"ஸ்ரீ காஞ்சிபூஷண அச்சுக்கூடத்திற்"
பதிப்பிக்கப்பட்டது.
1921.

(Registered Copy Right.)

[அணு—6.

உ

கடவுள் துணை

சர்க்குருவேய நம:

# அத்வைத

# ஞானசங்கீர்த்தனைகள்.

இஃது

வசவேஸ்வரர் பரம்பரையான

கன்னட ராஜய்யசுவாமிகள் மாணுக்கர்களில்

ஒருவராகிய

**கன்னட கெம்புமுனி சுவாமிகள்**

இயற்றியது

திருவள்ளூர்

“ஸ்ரீ காஞ்சிபூஷண அச்சுக்கூடத்திற்”

பதிப்பிக்கப்பட்டது.

1920.



உ

கடவுள் துணை.

# அத்வைத

# ஞான சங்கிர்த்தனைகள்.

நடு குத்தகை ராஜகோபால் தேவர் இயற்றிய

**விருத்தம்.**

பரமனார்பாதம் பணித் தொண்டரி லொருவர்
பரசிந்தனைப் பகலிரவுப் பற்றின மனனேயர்
னேசிக்கும் சீடர்க்கு ஞயமுடன் ஞானபோதகர்
ஞயமுடனே தமிழ்ஞான மளித்தகுரு கெம்புமுனியே.

## குரு புகழ்வது,

(1) மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

குருகெம்புமுனி புகழ் குறித்துச் சொல்லுகுரேன்
கொஞ்சந்தெரிந்த வரைக்கும் (குரு

சரணங்கள்.

அருமாமறைகளும் மனுதினமும் பன்ன
பருவபக்குவர்க்கும் பாலிப்பாய் ஞானஞ்சொன்ன (குரு
ஜனனமரண சம்சார கோரத்தை நீக்கும்
மனனமது தெரிந்தால் மனோலயம் வாய்க்கும் (குரு
சரியைகிரியையோகஞ் சார்ந்துஞானங்கடந்து
துரியாதீதமும் தொடரச் செய்யும்மடர்ந்து (குரு

சாதனை இல்லாதவர் சகலர்க்கும்மபரோக்ஷம்
ஆதலாலறிவுள்ளோர் ரனைவர்க்கும்பரோக்ஷம் (குரு)
நருமலர்வாவிசூழ் நகர்தண்டுரையில்
சின்னகுருசாமிக்கு ஞானகுறிப்புச்சொன்ன (குரு)

---

## கெம்புமுனி சுவாமி குருவணக்கம்.

(2) நாட்டைராகம் – ஆதிதாளம்.

பல்லவி,

குருபாதம் மாவாதே மனமே தினமும்
ராஜையர் குருபாதம் மரவாதே (குரு)

சரணங்கள்.

குருபாதம் மரந்தால் தெரிவினிலலைவாய்
குருபாதம் மரவாமல் மனதினில் நினைவாய் (குரு)

அருமறை முடிவை அரியவேக் காட்டும்
வானந்தமுதை யன்பாய் யூட்டும் (குரு)

மனதின் மாயாவை மாற்றியே போக்கும்
மனுதினம் மம்பரச் சோதியைச் சேர்க்கும் (குரு)

விருத்தம்.

நீர்க்கொண்ட வாழியை நிலைக்கவே வமிக்கவில்லையோ
நீருண்டு சப்தமேகங்கள் சூல்கொண்டுமாரிபொழியவில்லையோ
நிரந்தரமாக ரவிமதியை மாரிவர வமிக்கவில்லையோ
நிரைந்த வாகாயம்போலென் மனவிர ளகற்றமரிதோ மாசிலானே.

---

(3) இ–ம்-சாவேரி-அட தாளம்.

பல்லவி.

அரிவானவடிவே அருள்ஞானமுடிவே (அரி)

சரணங்கள்.

ஆனந்தக்கடலே அண்டர்களமுதே
அழியாதமருந்தே ஆனந்ததேனே (அரி)
முளையாதச்செடியே முடிவில்லாக்கொடியே
பூவாதப் புஷ்பமே காயாதக் கனியே (அரி)
இறையாத தீர்த்தமே குறையாத வெள்ளமே
குறிப்பில்லாச் சொல்லாமே குறித்துநீக்கொள்ளுமே (அரி)
வெட்டாதச் சக்கரமே மெட்டாத புஷ்பமே
பேசாத மந்திரமே பேசற்றபூசையே (அரி)
எங்கெங்கும் நிறைவே யேகாம்பரவெளியே
யாதொன்றும் நிகரில்லாத் தலைமைசோதியே (அரி)

விருத்தம்.

ககனவட்டக் கப்பலேறிக் கலங்காமல்
கருத்துக் கெட்டாக் கடல்தனை நீந்தி
கமலமல ராயிறத்தெட்டுத் தளமுங்கண்டுச்
சொர்னப் புரிக்குள்ளச் சொக்கிருப்பது சுகம்.

---

(4) இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சத்திய தெய்வமே சத்திய மலையே
சர்வயாவியே சாயுஜ்யப் பதவியே (சத்)

சரணங்கள்.

சின்மயானந்தமே சிதாகாசமே
பேசாமௌனமே பேரின்பப்பதவியே (சத்)
கருணாக்காரமே காருண்ணியப்பொருளே
கருத்துக்கெட்டாதே காருணானந்தமே (சத்)

நிர்விக்காரமே நிர்த்தொந்த போதமே
நீங்காயோகமே நிச்சலபதவியே (சத்)

பிந்து நாதமே பஞ்சபூதமே
பிரவாப் போதமே மேகாம்பரப்பதவியே (சத்)

---

(5) இ-ம்—காமாஸ்-சாப்பு தாளம்.

பல்லவி.

பாபரகிதம் பரமபத பவிதம்

அநுபல்லவி.

பரிபூரண யோகம் பரமானந்த போகம் (பாப)

சரணங்கள்.

சுகஞானசுகஞ் செயஞ் சுகயோக மனோலயம்
சுப்ரகுரு தேஜம் சுகாசுகம் மஹாநு பாவம் (பாப)
நாதபிந்துகளாகிதம் நாமரூப பேரனந்தம்
நாசிமுனை நடுமயம் நாதாந்த சோதிமயம் (பாப)
ஏகாந்த ஸோஹமயம் மெங்கும் ப்ரகாசமயம்
ஏகாம்பரநாதமயம் மெங்கும்பரிபூரணமயம் (பாப)

---

(6) நாமாவளி சாயல்—ஏகதாளம்.

பெரும்பொருளே பராப்பரமே
பேரறிவே பற்றில்லானே (பெரு)

சரணங்கள்.

பற்றில்லாபெரும்பொருளாய் பாரெங்கும் நிறைவான
யாவைக்கும் முதற்பொருளாய் யவ்வுயிராய் நிறைந்தோனே (பெ)

சிரஞ்சீவிவாகாயம் ஸ்திரமானவாயுவானாய்
வாயுவிடவனல்லோ வன்னியாய் யுதித்தோனே (பெ)

---

வண்ணியின் கசுவூரல் நீராகி நிசைந்தோனே
நீரழக்கு நிலமண்ணுய் நீள்புவியோனுய்(பெ)
மலராகி மணமாகி தேனூரல் விற்தாகி
மூலமாய் மூளையாகி மூவுலகமானேனே(பெ)
நாதபிந்து ரூபமாய் நானுவிதநாமமாய்
நாதாந்த ஒளியாகி ஓரறிவாய் நிரைந்தோனே(பெ)
குவிதலும் விரிதலாய் விரிதலுங் குவிதலாய்
வேதாந்தஞானமாய் வேகாம்பரமானேனே(பெ)

---

(7) இ-ம்-நாதநாமக்கிரிகை-அடதாளம்.

பல்லவி.

நாமரூபங்களு மில்லாதது வது
நான்மரைக்குள்ளாகிக் காணுதது (நாம)

சரணங்கள்.

அண்டரண்டப்பிரம்மாண்டம் மொன்ருகி நிரைந்தது
அண்டமுமணுவாகி வானந்தமானது (நாம)
நீராலும்நெருப்பாலும் ரவியாலும்மழியாது
நிராமயமாகி நின்றதுதானுகி (நாம)
வேதநான்குமாறுசாஸ்திரம் மோதினுலுத்தெரியுமோ
வேதகுருமகதீஸ்ரப் பாதம்தொட்டால்தெரியுமே (நாம)
தானே தன்னை தானரிந்தால் தத்தவமெல்லாம்ரகிதமாகி
தானேயல்லாமாகிநின்ற ஏகாம்பரனந்தமே (நாம)

---

(8) இ-ம்-நாட்டை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

துதிமனமே துதிமனமே மகங்குடிகொண்ட
மகதீஸ்வர் பாதம் (துதி)

வசுங்குடிகொண்ட வகதீசர் பாதம்
மனுதின மருவாமல் மனதினில் துதிசெய் (துதி)
பரகுருநாதனைப் பதிதரும் போதனை
பலபல உயரானப் பரமனைப் பணிந்திடு (துதி)
இருதயாலயத்துள் ளிருந் திடுமீசனை
இராப்பகல்மறவாம லீஸனைத் துதித்திடு (துதி)
நித்திய நிர்மல நிராமயனே
நித்தியசாக்ஷி மேகாம்பரனே (துதி)

விருத்தம்.

மூவா முதலை மும்மல மில்லாதே
முனிவர்க் கருளை முத்தி முதலை
மூவுலகம் போற்றும் முக்குண மில்லாத
மூடநான் போற்றினேன் முத்தியருள் வாயே.

(9) இ-ம்-தன்யாசி-அடதாளம்.

பல்லவி.

நினவொன்று நினையாதே நிர்க்குணகுருச்சொன்ன
நினைவிட்டு அலையாதே மனமே—மனமே(நின)

அநுபல்லவி.

நினவொன்று நினையாமல் நிராமயத்தைப்பாரு
நினவே யுலகமாக நின்றவன் நீதானே (நின)

சரணங்கள்.

ஆய்கடலலைபோலே வலைகுராய் வனுதினம்
மூவாசை வலைசிக்கி இலவம்பஞ்சாகுராய்
அரிவானை வரிந்து நீ அரிவினைச்சேர்ந்து
அல்லும்பகலுமில்லா வெல்லையைச்சேருவாய்(நின)
அரவத்தின் வாயினுள் ளகப்படுந்தேரைபோல்
பவபந்தவலைசிக்கிக் கடைத்தேருவதுமெப்போ
குருசொன்ன நிலையல்லோ . வல்லலருக்கும்மெல்லை
சொல்லற்றயிடமது சுகமுடன்நீ சேரு(நின)

நினைப்புமறப்பாலே நீள்புவனமெல்லாம்
நினைவினாலல்லவோ நீயாகவந்தது
நினைப்புமறப்பற்று நிர்க்குணமாய்நின்றால்
நீங்காவேகம்பரம் நீயானதுதானே (நின)

விருத்தம்.

நித்தியமுமாகி நித்தியனந்தமுமாகி
நிர்விக்காரமாகி நிர்க்கொந்தமாகி
நிர்க்குணரகிதமாகி நினைவுக்குநினைவாகி
நித்தியவர்ப்புத விலாசமானப் பராபரமே

10. இ-ம்-- சாவேரி—அடதாளம்

பல்லவி.

நீங்காச்சிவயோக நிஷ்டையருள்தாராய்
நிர்க்குணனந்தமே (நீங்கா)

அநுபல்லவி.

நீங்காசிவயோக நிஷ்டையிலேநின்று
தானே தானறிவேனே நிர்க்குணனந்தமே (நீங்கா)

சரணங்கள்.

ஆப்க்கடலலைப்போலே அலையாதேமனமலே
நிர்க்கநிலைச்சொல்லுவாய் நிர்க்குணனந்தமே (நீங்கா)
உளியிட்டகல்லுபோல் புளியிட்டச்செம்பாக
உள்ளருள்செய்குவாய் நிர்க்குணனந்தமே (நீங்கா)
ஈராறுமலைமீது வந்தரந்தனில்நின்று
ஆனந்தங்கொள்ளுமோ நிர்க்குணனந்தமே (நீங்கா)
பேரில்லாப்பேருரைப்பெற்று நானிருக்காப்
போனவேகாம்பரம் பெற்றுநான்வாழ்வேனே
நிர்க்குணனந்தமே (நீங்கா

(11) இ-ம்-பிலஹரி-ஆதிதாளம்.

பல்லவி.

சொர்ப்பனமாச்சே தோற்றியயுலகம்
சொர்ப்பனமாச்சே

சரணங்கள்.

சொர்ப்பனமாச்சு தோற்றியயுலகம்
கானனீரைக் கண்டது போலே (சொர்)

கர்ப்பனையுலகங் கர்ப்பூரம்போல்
கடலின்னுரைக் கண்டதுபோலே (சொர்)

நாமரூபமும் நாஸமைமாகும்
நாதாந்தவெளி நிச்சயமாகும் (சொர்)

ஆசாபாசமுங் காற்றாய்போகும்
ஆதாரமொன்றெ நிச்சயமாகும் (சொர்)

உற்றார்பெற்றார் முரவின்முறை
சுற்றத்தாரும் சொர்ப்பனமாகும் (சொர்)

காலாக்காலங் கடந்தமெய்க்காலம்
காணப்போமோ மெய்பரசோதி (சொர்)

---

(12) தோடிராகம் - ஏகதாளம்.

பல்லவி.

ஊரைக்காண்பதெப்போ பரவெளி
ஊரைக்காண்ப தெப்போ

அநுபல்லவி.

ஊரைக்காண்பதெப்போ உள்ளமும்புறமும்
உறவாகிநிரைந்தோர்க்குக் காசினிவாய்வில்லை (ஊரைக்)

மனமந்திரியை மனையிலிருத்தி
மகமுஞ்சேனையை படையையொடிக்கி

பார்த்துச்செங்கோலை பறைமென்றுசெலுத்தி
திரணகின்ற திருவருள்கொண்டு (ஊரைக்)
ஆருநமேல்வீதி நடுவீதிநாதனை
நாலுபேருங்கூடி நாடியன்னைசூழ
வற்றுதலைமேடுத் தாண்டிக்கிடாக
நாடியவ்வூரினில் நாட்டங்கொள்வதெப்போ (ஊரைச்)
ஆற்றங்கரைக்கண்டு ஆற்றில்வரும்நீரில்
கங்காஸ்நானஞ்செய்து அங்கமிளப்பாரி
தங்கமண்டபத்தில் சிங்காதனமேரி
செங்கோல்கொள்வதெப்போ (ஊரைக்)
ஆருஊருறக்க யல்லையிலேநின்று
தெள்ளுமணிக்கோட்டைக் குள்ளக்காலுங்கொண்டு
காணக்கிடையாதக்காஷி ஏகம்பனைக்
காண்பதினி யெப்போ (ஊரை)

---

(13) இ-ம் - தோடி ஏகதாளம்.

பல்லவி.

தன்னைத்தானே தானரியவேணுமே
தானேத்தானே தன்னரியவேணுமே

அநுபல்லவி.

அல்லுமில்லை பகலுமில்லை
ஆதியந்த மொன்றதாகி
சுத்தசூன்னிய சுழம்புவாகி
துலங்குகின்ற பொருளுமொன்றே (தன்னை)
அலரும்வேதம் மாறுசாஸ்திரம்
மருபத்து நாலுகலை
ஓதும்நூல்க ளெல்லாஞ்சேர்ந்து
மொருபொருளை யரிபவே (தன்னை)

அங்குமிங்கு மெங்குமாகி
எல்லாஜீவமான பொருள்
எங்குநிறைந்த மேகாம்பரம்
சேர்ந்துவாழ வேணுமே (தன்னை)

---

(14) நாட்டை இராகம்—ரூபகதாளம்

பல்லவி.

நிஜநீயேநீநின்று பாரடாநெஞ்சே
நிஜநீயேயுனக்கு நீநில்லடா

சரணங்கள்.

மனிநிலைநிஜமாச்சு மனமலைநினவாச்சு
நினவுபூரணமானல் நாமமும்பொய்யாச்சு (நிஜ)

மானபிமானத்தை மாற்றடாநெஞ்சே
மௌனத்திலிருந்து மதியமதுண்ணடா (நிஜ)

கடலைதடகடமுதல் நிறைவானப்பரிபூரணம்
நினவுக்குநினைவாகி நிஜங்கொண்டவாரணம் (நிஜ)

படர்த்தினிற்பிம்பம்போல் பற்றில்லாநில்லடா
பற்றில்லாலேகாம்பரம் நிஜநீயேநில்லடா (நிஜ)

விருத்தம்.

கானர்நீர்தாகத்தை யடக்குமோ
கானகத்தெட்டிக்கனி யினிப்பாகுமோ
காசினிர்க்கண்டக்கல் தெய்வமாமோ
கசித்துனிர்க்க கடவுளரிக்கருமனமே

---

(15) சௌராஷ்டம்—அடதாளம்.

பல்லவி.

அருள்ஞான வடிவே அருமறை முடிவே

அநுபல்லவி.

அரிவினிர்க்கரிவே வரியாதவெளியே (அருள்)

சரணங்கள்.

மலர்ந்தமதியே மரிக்குமிருளே
மலர்ந்தசுடர்க்கோடி மஹாரஞ்சிதவெளியே (அருள்)
தூண்டாதச்சுடரே சுயஞ்சோதிசுயம்பே
தானனந்தாண்டவம் தன்னிகரில்லாதே (அருள்)
மாசில்லாமணியே மருவில்லாநிஜமே
நிஜமானமப்பரம் நிச்சலசோஹமே (அருள்)

---

(16) இ-ம்-பந்துவராளி—அடதாளம்.

பல்லவி.

பேசுமீசன்நேசமானற் காசினியில்காலனில்லையே
பேய்மனமே காலனில்லையே

சரணங்கள்.

வாசிவீசிரேசிகாலை வாசியோடுகும்பந்தன்னில்
பொங்கிவரும்பாலையுண்டு சண்டனைநமனைவெல்லு (பேசு)

காலைமாலையல்லையிலே மாயமையில்மேயுதங்கே
காலைமடிக்கிலேயேப்பார்த்தால் மாயமையில்மறையுமே (பேசு)

அல்லும்பகலில்லாயல்லையில் லன்பொரியும்பொரிபொரித்து
அன்புலனுங்கரிகரித்து யேகாம்பரமானதே (பேசு)

---

(17) இ-ம்-பந்துவராளி—அடதாளம்.

பல்லவி.

கலப்பையைசெய்தேனே கர்ம்மகரும்பற
வுழவே கலப்பையைசெய்தேனே (கலப்)
கருத்தைகலப்பையாகி கடுங்கோபங்கார்க்கட்டி
கர்வத்தைநொகையாக்கி கலப்பையதில்மாட்டி (கலப்)

மாயமெருதுகளை மடிக்கியேவர்க்கட்டி
தலைகயிர் ரெண்டையும் கைபினிற்பிடித்து
குரிமோய்நிமித்தி நேராகவோட்டினேன் (கலப்)
பந்தமென்றநிலம் பழுக்கறவுழுது
ஆசையென்ற கறுவை அடியோட வெடுத்து
பரமானந்தவிதை பருவத்தில் விதித்தேன் (கலப்)
பரமானந்தமுளை பதமாக முளைத்திட
கர்ம்மமானக்களைக் கூட்டேமுளைத்தது
தர்ம்மமானமான்கள் களையதைப்பரித்தாரே (கலப்)
ஆனந்தபாஷ்பத்தை நீராகப்பாச்சினேன்
பரமானந்தபயிர் சுழுப்பாகவிளைந்தது
முன்னான்குவருஷத்தில் முழுதுங்கதிராச்சே (கலப்)
ராகாதிமிருகங்க ளழிக்காமலனுதினம்
காமாதிக்கள்ளரை யணுகாமலேதுறத்தி
பரமனந்தபலிதம் பரிப்பூரணமாச்சே (கலப்
இருடிமாமுனிவோரும் இகபரமிரண்டிற்கும்
பரமானந்தபலிதம் மேகம்ரமானது
பாவிகளானோர்க்கு பரமானந்தப்பய்ரோ (கலப்)

---

(18) • இ-ம்—அருட்பாசாயல்-ஏகதாளம்.

காயமேபொய்யடா இதுகாற்றடைந்தபய்யா
இடைகலைதடையானல் இதன் கதியென்னமோ (காய)
தந்தைதாய்பிந்துநாதந் தொந்தமாகிவந்தகருவு
தந்தநாடிமாங்கிசமு மந்தமானபொம்மைடா (காய)
காயமிதுபொய்யடா இதுகானநீருஜலண்டா
வஞ்சபஞ்சபூதமாகி வந்தகாயமிதாடா (சாய)
பாபபுண்ணியமூட்டையாக வந்தகாயமிதாடா
கர்ம்மபூமிக்கடன்தீர்ந்தால் கீர்ப்பூரச்சுடாடா (காய)

நவத்துவாரக்கட்டையிது நடலஞ்செய்வதுப்பாரடா
நாதன்காணும்வாசலென்று நாடியங்கேப்பாரடா (காய)

தொண்ணூத்தாறுதத்துவங்களுந் தொந்தமானக்காண்டா
காணவேணுஞ்ஞானதிருஷ்டிக் கண்ணாலேபாரடா (காய)

அகந்தனிர்க்குடிக்கொண்ட வசதீசரைக்கண்டால்
அரிதானமேகப்பரம் மரிவதுசத்தியமே (காய)

---

(19) அருட்பாசாபல்—ரூபகதாளம்.

பல்லவி.

மாசில்லாமணிவிளக்கே என்மனமபூந்தேனமுதே
மாசில்லாநிரைவான வானந்தசோதியே (மாசி)

மாணிக்கமலைமீது மைலொன்றுமாடுது
மடிக்கிப்பிடிப்பவர் பகதிசர்தொண்டரோ (மாசி)

மாசில்லாமலைமீது மாணிக்ககுயில்கூவும்
குரல்குத்தமுண்டடி கோகிலமேக்கூராயே (மாசி)

சாரையுஞ்சர்ப்பமு மிருகுகையில்பூர்ந்தது
மிருதலையும்மொருதலையாய் நின்றதைச்சொல்லடி. (மாசி)

அண்டமலைகுகையினில் அரிவிரண்டுபாயுதா
அந்தவூரல்ருசியெனமோ மரிந்துநீசொல்லடி (மாசி)

கைலைமலைமுன்னிலே மாருசக்கரமாடுது
வசையாமல்நிர்க்கவொரு மந்திரஞ்சொல்வாயே (மாசி)

நவத்துவாரக்கோட்டையுள்ளே நவச்சித்திரங்காணுது
வதிகாரியாரவனோ வரியாயோயனங்கொடியே (மாசி)

கோட்டைகோபுரவாயினுள் தசவிதநாதங்கள்
நாதபிந்துநாதமோ நானரியசொல்லடி (மாசி)

நாதபிந்துவடிவல்லோ நானுவிதபெயராகி
நாதாந்தவொளியாகி சிர்ச்சத்திவடிவானது (மாசி)

மதியொடிக்கிரவிசேர்த்து மாவிந்தி [illegible]
மாசில்லாசோதியோ மேகாம்பரமானது (மாசி)

R6,6 N21

(20) இ-ம்-மைரவி—ஆதிதாளம்.

பல்லவி.

சும்மாவருமா பரமசுகந்தானுவ்வருமா (சும்மா)

அநுபல்லவி.

சும்மாவருமா சுகானந்தம்
சற்குருவில்லாமல் சாதிக்கபோமா (சும்மா)

சரணங்கள்.

வையகத்தவர்கள் வாதுகள்பேசி
வாச்சாபேசி வீம்புகளாச்சி
வருவதும்போவதும் வாடிக்கையாச்சி
வானந்தசோதி வாய்க்காமற்போச்சி (சும்மா

தத்துவத்தன்மைத் தெரியாமற்போச்சி
தானேத்தன்னைத் தெரியாமல்விட்டு
அகப்பைபாட்டம் மேலிட்டுப்போச்சி
அகண்டபரவெளி அடையாமலே (சும்மா)

விராட்டுருவை விடாமற்பற்றி
வேதாந்தச்சாரம் விவரந்தெரிந்து
விஸ்வனென்ற அறிவைவறிந்தால்
தன்னகரில்லா லோகாம்பரமே (சும்மா)

---

(21) இ-ம்-நாட்டை-அடதாளம்.

பல்லவி.

அகமேயே அடங்கடா
அறிவினைச்சேர்ந்து வானந்தங்கொள்ளடா (அக)

அகமேயேயடங்கி அலையாமல்நில்லடா
அகவிருள்நீக்கடா வெளிச்சத்தைபாரடா (அக)

பதியானபரவெளி பதியில்நில்லடா
பதியானபரம்நீயே நிஜம்நீயேபாரடா (அக)

விஷயாதி போகத்தை வீணென்று தள்ளடா
விஷம்புசானென்று விபரித்துப்பாரடா (அக)
நவசித்திர நடலங்கள் நீசெய்வது ஜாலண்டா
நாதாந்த வேகாப்பரம் நாடிநீ நில்லடா (அக)

---

## (22) திரு அருட்பாசாயல் ஏகதாளம்.

### பல்லவி.

| | |
|---|---|
| அருட்சோதி தெய்வமது | அருள்ஞானதெய்வம் |
| தன்னருள்வெளிக்குள்ளே | தானானதெய்வம்(அரு) |
| ஆதியுமந்தமுமாய் | அறிவான தெய்வம் |
| அறிவினிற்கரிவாகி | வானந்தமான தெய்வம்(அரு) |
| நாதபிந்துகலையாகி | நானாவிதமான தெய்வம் |
| நாதாந்தபேரொளியாய் | நின்றொலிக்கும் தெய்வம்(அரு) |
| பூவாதபுஷ்பமாகி | பூர்த்தமொரு தெய்வம் |
| மாராதமணமாகி | மணக்குகின்ற தெய்வம்(அரு) |
| காயாதகனியாகி | கனித்துநின்ற தெய்வம் |
| கனியினிடசுவையாகி | சுவைதந்த தெய்வம்(அரு) |
| வித்தாகி வித்துனிட | மூலமான தெய்வம் |
| மூலமாப் முனையாகி | மூவுலகமான தெய்வம்(அரு) |
| ஐந்தலை நாகமாகி | யாடுகின்ற தெய்வம் |
| ஐந்துருவுமோருருவாய் | மகண்டமான தெய்வம்(அரு) |
| அன்னையுமப்பனுமாகி | அன்புவைத்த தெய்வம் |
| மாடாததிருக்கூத்து | மாட்டுகின்ற தெய்வம்(அரு) |
| மறைநான்குக்குள்ளாகி | மெட்டாதத் தெய்வம் |
| மறைமுடிவிலாடுகின்ற | மானந்தமான தெய்வம்(அரு) |
| மதிரவியிரண்டாக்கி | மாற்றிநடத்தும் தெய்வம் |
| மஹாதேவர் யாவர்களும் | போற்றுகின்ற தெய்வம்(அரு) |

பாவியென்று பேர்படிக்க படைத்துவந்த தெய்வம்
பாருலகிலெல்லோரைச் சிரிக்கவைத்த தெய்வம் (அரு)

பாபமும் புண்ணியமும் சுமைக்கவைத்த தெய்வம்
பாபங்களெல்லாந்தான் பரிகரிக்குந் தெய்வம் (அரு)

சிந்திக்குஞ் சிந்தையுள்ள சிந்தையான தெய்வம்
சித்தாந்த பேரொலியாய் துலங்குகின்ற தெய்வம் (அரு)

கல்லமும் முள்ளமுங் கலந்தரியும் தெய்வம்
கள்மனமுள்ளவே கண்டிக்கும் தெய்வம் (அரு)

மாணிக்க ஒளியாகி ஒலித்துநின்றதெய்வம்
மாசில்லாமணிச்சுடராய் மலர்ந்துநின்ற தெய்வம் (அரு)

தூரமும்சமீபம் துரியமுமான தெய்வம்
துரியாதீதமானதொரு மேகாம்பரமான தெய்வம் (அரு)

---

(23) இ-ம்-தேசிகதோடி-அட தாளம்.

பல்லவி.

அரிவினிற்கரிவே அருள்ஞான வெளிபே (அரி)

சரணங்கள்.

அரியாதக்கருத்தாக அரிந்தோருக்குமரிவே
அரியார்க்குயிருளே அரிந்தோருக்குமருளே (அரி)

கவியானக்கதையல்லா கண்டுங்காணுதல்லா
காத்தினிற்யுதித்த யனுபவனந்தமே (அரி)

இருந்து மில்லாதது இல்லாமலிருந்தது
யாதொன்றும் பேரில்லா யெங்கும் நிறைந்தது (அரி)

பொய்யில்லா மெய்யிது பொதுவாக நின்றது
ஈராறுசமயத்துள் ளதுவாகநிரைந்தது (அரி)

பிரக்காது மிறக்காது பிரப்பில்லாமானந்தம்
மேகாம்பரமானது மெங்கும் நிரைந்தது (அரி)

(24) இ-ம்-தோடி-அட தாளம்.

பல்லவி.

வெளியைப் பராபரம் வேதாந்தவெளியைப்பராபரம் (வெ)

சரணங்கள்.

வெளியிலே வெளியாச்சு வேதாந்த முடிவாச்சு
சர்வமுந்தானச்சு சந்தேகமில்லாமல் (வெ)
விரித்தது குவிந்தது விபரீதமானது
விஸ்வமுந்தானகி வித்துக்குள் முளையது (வெ)
முளையாது விளையாது முடிவானப்பொருளது
மேகாம்பரமானது மெங்கும் நிறைந்தது (வெ)

---

(25) இ-ம்-சாமா-ஆதிதாளம்.

பல்லவி.

நிராசை தெய்வமே நிஜானந்தம்
நிராசை தெய்வமே

சரணங்கள்.

நிராசை தெய்வம் துராசை தூரத்தி
பராசைதானகி நிராசையானது (நிரா)
விகாரமில்லாமல் விசாரந்தானகி
நிர்ப்பலந்தானே நிராசை தெய்வம் (நிரா)
வேசாரமில்லாமல் வேதாந்தந்தானகி
வேதமுமறியாத வேகாம்பர தெய்வம் (நிரா)

---

(26) அருட்பாசாயல்-ஏகதாளம்.

கண்ணனக்கண்மணியே கற்பழியாக்கன்னிநீ
பொய்யில்லாப் பொற்கொடியே பொன்மணியேபோற்றினேன்
மனோன்மணி மாதாநீ மண்டாண்டம் படைத்தவளே
அன்னையேமாதரித்து மழுதூட்டும்மன்னையே (கண்)

மகளெனவேவந்துநீ மழலைப்போல்பேசுவாய்
பெண்டெனவேக்கூடிநீ பேரின்பந்தந்தவளே (கண்)

அண்டமும் பிண்டமும் மலகைப்போலாட்டுவாய்
அரகரிப்பிரம்மரும் மரிவாரோவுன்மகிமை (கண்)

நாலாவிதயோனியும் ஏழுவிதத்தொந்தங்கள்
ஈஎரும்புயானைமுதல் எண்ணரியவிதமானாய் (கண்)

பரஞ்சோதி பாவையே பாரெங்கும் காமரூபி
அரிந்தவர்க்கன்னையே அரியார்க்குநமனேநீ (கண்)

சித்தாதிகடியார்க்கும் சித்தாடும்வல்லிநீ
நிந்திக்காவலதோர்க்கு பேயானமாயைநீ (கண்)

மின்னர்க்கொடி ரவிமதியும் நக்ஷத்திரம்வன்னிச்சுடர்
ஐவிதச்சுடராகி வகிலமாயாடுகிறாய் (கண்)

ஆதியும்மந்தமும் மந்தத்தின் மாயைநீ
மாயைமுனை மீதினில் மாயாதமயிலுநீ (கண்)

கண்ணனக்கண்ணுநீ கண்ணுக்குள் பணியுநீ
மணிக்குள்ளமாயரூபி மகிழ்ந்திடச்செய்வாயே (கண்)

சப்தமுரூபமாய் ரஸமுடன்க்ராணம்நீ
சரஸத்தையரிந்த சத்துநீயரிவானாய் (கண்)

முனிவருந்தேவராய் அறக்கரும்நரருகி
மூவரும்முதலாகி முடிவில்லாக் கண்மணியே (கண்)

ஆகாயம் வாயுவானாய் வன்னியுமப்பானாய்
பிறதிவுச்சத்துநீ பிறப்பித்தாயனந்தம் (கண்)

சூக்ஷாதி சூக்ஷம்நீ சூக்ஷத்தின்சுழுத்திநீ
பேசாதமௌனம் பிறப்பில்லாலேக ம்பரம் (கண்)

---

(27) இ-ம்-கன்னடம்-அடதாளம்.

பல்லவி.

சிக்கில்லாப்பொருளது சிக்காது யாருக்கும்
சிந்திக்கு முள்ளத்தில் சித்ரூபமானது (சிக்)

சரணங்கள்.

சிந்தையுஞ்சினமில்லா சின்மயமானது
சிந்திக்க சிந்திக்க சிந்தாமணியாது (சிக்)
மேலல்லா கீழல்லா மெய்யல்லாபொய்யல்லா
தன்னருள்வெளிக்குள்ளே சர்வமும் தோற்றிடுமே (சிக்)
மேகாப்பரயானது மெங்கும் நிரைந்தது
மெய்யானத்தலைமைத் தானேத்தானனது (சிக்)

---

(28) இ-ம்-தோடி-அடதாள சாப்பு.

பல்லவி.

சூர்யோதயமாச்சு சுகஞ்ஞானகுருநாதா
சூர்யோதயமாச்சு

சரணங்கள்.

சூர்யோதயமாச்சு சூழ்ந்தயிருளும்போச்சு
ஸுவாஸப்பந்தமுமாச்சு சோதித்தோற்றவுமாச்சு (சூர்)
அருபொரியுமந்தம் மரிந்திடும்ஸய்போச்சு
ஆடிடும்மனமொன்று நாடிநின்றதங்கே (சூர்)
ஆராதாரமுந்தொல்லை அப்பாலொன்றுமில்லை
சுத்தசுயம்பான சூன்னியமானதேதோ (சூர்)
முக்குணமொன்றாச்சு மூலமூவரிவாச்சு
சுத்தஸ்படிகமாச்சு சுகஞ்ஞானவேகாம்ப (சூர்)

---

(29) இ-ம்-பியாகு-மட்டியம் தாளம்.

பல்லவி.

திருவருள் கனியை காணுங்கள்
தீண்டாதே பரித்துண்ணுங்கள்

சரணங்கள்.

தில்லைக்குளத்திலே செடிமுளைத்து
திண்டாதிடத்திலே கொடியேடி
பூராதிடத்திலே புஷ்பித்து
பாராதிடத்திலே பழம்பழுக்கும் (திரு)

ஏராமரம் மேருங்கள்
எட்டாமுளையில் நில்லுங்கள்
காயாக்காயைக் காணுங்கள்
கசங்காக்கனித் துண்ணுங்கள் (திரு)

தின்னத்தின்னத் தித்திக்கும்
திரேகமெங்கும் பூரிக்கும்
ஜெனனமரணம் போக்கிடும்
திரும்பிஜனனம் வாராது (திரு)

திண்டாத்திருமேனித் தீண்டுங்கள்
திருவருள்வெளியைப் பாருங்கள்
எல்லாமுதித்த தாரகம்
எங்கும் நிறைந்த ஏகாம்பரம் (திரு)

---

(30) இ-ம்-நாதநாமக்கிரிகை-ஏகதாளம்.

பல்லவி.

காயமேபொய்யடா யிதுகாற்றடித்தபையடா
யிடைகலை தடையானால் இதன்கதி என்னமோ (காய)

சரணங்கள்.

தந்தைதாய் பிந்துநாதத் தொந்தமாகிவந்தகருவு
தந்தநாடி மாங்கிசமு மந்தமானபொம்மையடா (காய)
காயமிதுபொய்படா யிதுகனல்நீர்ஜலண்டா
வஞ்சுபஞ்சபூதமாகி வந்தகாலமிதடா (காய)
பாபபுண்ணியமூட்டையாக வந்தகாயமிதடா
கர்ம்மபூமி கடன்தீர்ந்தால் கர்ப்பூரச்சுடரடா (காய)

நவத்துவாரக் கட்டையிது நடஞ்செய்வதுப்பாரடா
நாதன்காணும் வாசலொன்று நாடியங்கேப்பாரடா (காய)
தொண்ணூற்றாறு தத்துவங்களுந் தொர்தமானகாயண்டா
காணவேணுஞ்ஞானதிருஷ்டிக் கண்ணாலேபாரடா (காய)
அகத்தினிற்குடிகொண்ட வசுதீசரையரிந்தால்
அரிதானமேகாம்பரம் மரிவதுசத்தியமே (காய)

---

(31) இ-ம்-நாட்டை-ஏகதாளம்.

பல்லவி.

நிர்த்தனஞ்செய்தாரே நிரஞ்சனநடராஜர்
நிர்த்தனஞ் செய்தாரே (நிர்)

அநுபல்லவி.

நிர்த்தனஞ்செய்தார் நிரஞ்சன நடராஜர்
வர்ப்புதமாகவே வானந்தப்பொங்கி (நிர்)

சரணங்கள்.

அங்கம் முழுதும் மணிந்துவெண்ணீர்
இடையிர்க்கச்சை இறுக்கிவருந்தி
இருபாதத்திர்ப் பொர்ச்சிலப் பூண்டுத்
தங்கச்சறப்பளித் தாவடமாலையும்
ரத்தினப்பதக்கங்கள் நிசநிகவென்னவே
பக்கயில்பார்வதிப் பரவசமானாள்
பார்த்துக்காளியைக் கொக்கரித்தெதிரில் (நிர்)

மண்ணளித்தோன் தாளம்பிடிக்க
மாயனவனும் மத்தளங்கொட்ட
வந்தரவாசிகள் துந்துமிமுழங்க
வண்டம்பிண்டங் குலுங்கிநடுங்க
மதைக்கண்டுக்காலனும் மடியொடுங்க
ஒய்யாரமாகவே பாதந்தூக்கி

தஜ்ஜெனுத்தகஜெனு தளாங்குதகதிமி
தளாங்குதகதிமிதகத திங்கிணதோமென (கிர்)

அம்பலவாணன் நாட்டமுங்காட்ட
அஷ்டசத்திக ளாடிஞெதிரே
ஆகமுமீவதமு மடியாறனவரும்
மாஹரவென்று வானந்தங்கொள்ளச்
சிலம்பைக்குலிக்கிக் காலைத்தூக்கி
வண்டமும்பிண்டமு மொன்றாய்தாக்கி
வஷ்டசத்திகள் வெட்சமும்பட
வேதநாதன் காலைத்தூக்கி (கிர்)

பசுபதியும் பாதம்தூக்கிப்
பாதாளமும் மண்டந்தாக்கிப்
பத்தரக்காளிக் கர்வம்போக்கிப்
பொங்கிவரும் நமனைத்தாக்கி
போற்றுமடியாரை மனுநிங்காற்று
தந்தேன்பாதந் தந்தேனென்று
தக்கிடகிடதரிகிட தரிதளாங்கு
தளாங்குதகதிமி தகததிங்கிணதோமென (கிர்)

ஆதிமூர்த்தி வாட்டமுங்கண்டு
அய்யநடுவோ னந்தங்கொள்ள
வாதிக்காக்ஷி வேகப்பாதன்
எவ்வுயிர்தானுப் நிர்த்தனஞ்செய்யப்
பாதச்சிலம்புக் குலுக்கக்குலுக்க
பத்தர்மனங் களிக்கக்களிக்கக்
காலைதூக்கி மேலேநோக்கி
கதிர்மதிமண்டலம் மாலயந்தனிலே (கிர்)

விருத்தம்.

ஆறுமுகமும் பனிரெண்டுகையும்
அழகுவேலும் ஆடுமயில் வாகனமும்
சூரப்படையுடனே அசூரரைமாற்று
தேவர்துயரகற்றிய யாருமுக குருவே போற்றி.

(32) இ-ம்-பைரவி-அடதாளம்.

பல்லவி.

ஆறுமுககந்தா அருள்ஞானசுகந்தா (ஆ)

அநுபல்லவி.

அரக்கரை வதைத்துண்டாய் அகத்திசர்க்கருள் தந்தாய் (ஆ)

சரணங்கள்.

ஓரெழுத்துக்குகந்தாய் ஓங்காரவேல்கொண்டாய்
ஈராருபுஜங்கொண்டாய் இருசூரரைவதைத்துண்டாய் (ஆ)
தெய்வானைக்குகந்தாய் தேவமுடிபூண்டாய்
வேதமலைமீதினிற் வள்ளியைச்சிறைக்கொண்டாய் (ஆ)
வேலும்மயில்கொண்டாய் வேதாந்தமுமுண்டாய்
வேதகிரிமீதினில் வேகாம்பரம் நீயே (ஆ)

---

சுகவாரி.

ஸ்வோஹா ஸ்வயம்புவாகி
நிஸ்ஸப்த ஸப்தமாகி
துரியாதீதத் துரியமுமாகி
சுழுத்தியுஞ் ஸொப்பனமாகி
ஜாக்ரதாஜ் ஜாகர்த்தயுமாகி
நினைப்புடன் மறப்புமாகி
நின்றதாமஸமும்மானப்
பறதெய்வமே பரஞ்!
சோதியே சுகவாரியே. 1

ஒலியுடன் நாதமாகி
வாய்வுட னனலுமாகி
அப்புடன் பிரதீவுமாகி
சத்துடன் பிந்துமாகி
முனையாகிக் கிளையுமாகி
மூவுலகந் தானுமாகி
முதித்தசர்வ ஜீவமானப்
பரதெய்வமேப் பரஞ்
சோதியே சுகவாரியே. 2

சிவமானுஞ் சத்தியாகிச்
ஜாலமு நடலமாகிக்
குருவுஞ் சீடனுமாகிச்
ஜபமுந்தபமுமாகிச்
ஜாதியும் நீதியாகித்
தேவருங் கடவுளாகிப்
பாபமுபுண்ணியமானப்
பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே 3

குவிதலும் விரிதலாய்
விண்ணும் மண்ணுமாகி
நாலுவிதயோனியாகி
ஏழுவிதத்தோற்றமுமாய்
எண்ணரிய ஜீவகோடியுமாய்
நானுவித பேதமுமாய்
நர்க்கமுஞ் சொர்க்கமுமான
பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே. 4

## உண்மணியான கண்மணிக் கண்ணி.

பேசாமௌனப் பேரறிவானப் பேரானந்தம்
பெற்றிட மருற்ளுராயன்
உண்மணியான கண்மணிக்கண்ணே 1

பராசத்திப்பார் படித்துப்பாருலகமாளப்
பாமரகசியம் பாலிப்பா யய்யன்
உண்மணியான கண்மணிக்கண்ணே 2

பராசத்திப் பஞ்சரிவாய் பஞ்சமூர்த்தியாய்
மூனைத்தமூலமறிந்திட முரைப்பாயய்யன்
உண்மணியான கண்மணிக்கண்ணே 3

பஞ்சரிவேப் பஞ்சமுகமாய்
பாராகவந்ததைப் பகராயய்யன்
உண்மணியான கண்மணிக்கண்ணே 4

ஆதிபிக்துநாத மற்பூதமாய் யுதித்ததை
அறிந்திட மருற்ளுராயன்
உண்மணியான கண்மணிக்கண்ணே 5

ஊமைவெள்ளங்கொண்டு உற்றமமகத்திஸரை
உள்ளமறிந்திட மருளாயய்யன்
உண்மணியான கண்மணிக்கண்ணே 6

நாலாம்பதமுங்கடந்து நாதாந்தச்சோதியைச்சேர
நாதாந்தவம்பரஞ் சேரப்பாயய்யன்
உண்மணியான கண்மணிக்கண்ணே 7

---

## பராபரக்கண்ணி.

ஒன்றுய்ப்பலவுமாய் உலகமாயாடுகின்ற
ஓமெழுத்தின் வெளியேப் பராபரமே.

ஓலமிடும்நான்மறையுங்கூவியுங்காணுத
ஒளியாய்நிறைந்த வெளியேப்பராபரமே.

ஆறுலென்குறையை யாருடன்சொல்லுவேன்
ஆற்றுவாருனைய்யாப் பராபரமே.

அங்கமுநொந்தழுதக் கண்சிந்தையுமாய்
தங்கயிடமில்லாமல் தவிப்பேன் பராபரமே.

காமப்பாலுண்டுக் கருத்தழுந்துவிட்டேநான்
ஞானப்பாலுண்ணவாசைப் பராபரமே.

உள்ளமறிவாய் யுழப்பறிவாய் நானேழை
கள்ளமறிவாய் கருத்தறிவாய்ப் பராபரமே.

சிந்தையுந்நொந்து சிந்திடுங்கண்ணீரு
என்சிந்தைதெளியப் பகராய்ப் பராபரமே.

கல்லாதவன்வெருக்கடைக்கெட்ட கசடன்நான்
உன்கருணைக்காளாகுவனோப் பராபரமே.

கல்லோளங்களாகக்கடைந்தேனெக்தனையோ
ஜனனம் உன்கருணைக்குரித்தாகப் பராபரமே.

சடைமுடிக்காசாயம் சன்னியாசம்பூண்டாலும்
சாதிக்கப்போமோமனமாயைப்பராபரமே,

அஷ்டசித்தாடினும் மனல்மத்தியிருந்தாலும்
கடல்மீதுநடந்தாலும் கிடைக்குமோமுத்திப்பராபரமே.

ஆங்காரமுமடிக்கி அன்புலனைச்சுட்டறத்து
அறிவாய்த்தெளிவதெப்போப் பராபரமே.

பேரானப்பெரும்வெளியைப் பேசாதமௌனத்தை
பெற்றுநான்வாழ்வதெப்போப் பராபரமே.

அல்லல்படவாகாது வகிலஉலகத்தில்
அல்லல்லகற்றியருள் தாராய்ப்பராபரமே.

ஆறறிவாருனை அனந்தமறையோலமிடும்
அடியாறகத்துள்ளருளேப் பராபரமே.

எண்ணாத எண்ணமெல்லாம் மெண்ணிப்பாழ்
நெஞ்சம்புண்ணாவதேன் செய்வேன் பராபரமே.

நானென்றுநீயென்று நினையாமலிருந்த
நடுவேமுளைத்தமனதைக்கரியேன் பராபரமே.

காபகர்ப்பங்கள்செய்துக் கர்ப்பக்கோடிகாலமிருக்கினும்
உன்கருணைக்குரித்தாவேனோப் பராபரமே.

சர்ஜனர்ச்சங்கமும் சத்தியமொழிஞானமும்
தந்தெனையாளாய்ப் பராபரமே.

கண்டதைக்கண்டு உண்டதேவுண்டுறங்கவோ
வுடல்கண்டடியேன் காணிப்பராபரமே.

உதித்திடமரிந்து உண்மையிடஞ்சேர
உண்மைவெளியாக வருளாய்ப்பராபரமே.

கற்றதுங்கேட்டதுங் காற்றிலேவிட்டுவிட்டேன்
கசடனுக்கோர்வழிச் சொல்லாய்பராபரமே.

மூவாசைவெள்ளத்திற் மூழ்கியிருக்கயான்
மீண்டுனதடிக்காளவேனோப் பராபரமே.

சினமிறந்தாலும் சித்தாடக்கற்றாலும்
மனமிறக்காதேன் செய்வேன் பராபரமே.

முங்குணமுழுதித்து முவ்வுலகமாயாடும்
முக்குணமுதித்தயிடமரியேன் பராபரமே.

அவ்வரிவே எவ்வுயிராய் அவ்வரிவாயாடுகின்ற
ஏகாம்பரமாய்நிறைந்தப் பராபரமே.

---

இ-ம்-பூபாளம்-ஏகதாளம்.

பல்லவி.

ஆலமெடுத்தேன் கர்ப்பூராலமெடுத்தேன் (ஆல)

அநுபல்லவி.

என்சிந்தாமணிக்கி (ஆல)

சரணங்கள்.

சோதிக்குள்ள சோதியாகி
துலங்குகிற ஆவிக்கும்
சுத்தாதி சுத்தமான
சுத்த சுயம்புக்கும் (ஆல)

கோடிமின்னல் தோத்துகாட்டும்
மேகவெளி வெல்லைக்கும்
கோர்த்தகளைகுறையாத
ஸ்படிகமான சோதிக்கும் (ஆல)

நிஜமான நிச்சயத்துக்கும்
மழியாதசத்தியத்துக்கும்
நிஜானந்த ஏகாம்பரம்
நீங்காத ஜோதிக்கும் (ஆல)

---

## மங்களம்.

ஆதிதாளம் — பல்லவி.

ஜெயஜெய மங்களம் நித்தியஜோன் மங்களம் (ஜெ)

சரணங்கள்.

ஆதிவந்தமில்லாத ஆதிபரஞ்சோதிக்கும்
அண்டரண்டபிண்டமான மாதிபராபரத்துக்கும் (ஜெ)

ஆதியந்தமில்லாத மாதிராதபிந்துக்கும்
அகண்டநிறைவான வன்பூத உய்யருக்கும் (ஜெ)

அகற்றிறளகற்றிய வசதீசமுனிவருக்கும்
அகிலத்தில்ஜெனித்த அந்தமுள்ளதேவருக்கும் (ஜெ)

சிற்சத்திசிவமான சித்தாடும் சித்தருக்கும்
சித்தாந்த முடிவான சின்மயஞ்சத்திக்கும் (ஜெ)

ஆராதாரந்தாங்கிய நிராதாரவாதிக்கும்
அழியாதசத்திய சாயுஜ்ஜிய பதவிக்கும் (ஜெ)

எண்ணுகிற எண்ணமெல்லா மெண்ணரியுமாவிக்கும்
ஏகாம்பரமானதொரு மெங்கும்நிறைந்தசோதிக்கும் (ஜெ)

## வாழி விருத்தம்.

மெஞ்ஞானக்கீர்த்தனைகள் மென்மேலும்வாழி
மெஞ்ஞானத் தொண்டர்கள் மென்மேலும்வாழி
படித்தவர் கேட்டவர்கள் பாரினில்வாழி
எழுதினோர்ச்சிட்டோ ரேகாம்பருடன்வாழி.

அத்வைத ஞானசங்கீர்த்தனைகள்

முற்றிற்று.

# கற்றறிவுடையோர்க்கு வந்தனம்.

வந்தனம் வந்தனம் வந்தனந் தந்தேன்
கற்றறிவுடையோர் பாதந்தன்னை (வந்)

வந்தனந் தந்தேன்
சிந்தைமகிழ்ந்து
தொண்டரடிகளை
தொழுகுவே னனுதினம் (வந்)

சரிகை கிரிகையும்
சார்ந்த ஞானமும்
சர்வம் முடிவாகி
சாயுஜ்ஜியந் தந்தவர்க்கு (வந்)

ஒருவர்மீதுகுற்றமென்பார்
மவரவர்க்குற்ற மவருமரியார்
மவனியல்லாங் குற்றமாகும்
மதுவரித்தர வேகாம்பரமே, (வந்)

